**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**நாள்: 20.07.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்சனுடன் தொலைபேசியில் உரையாடினார்.

பிரதமரின் 112 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் தங்கள் ஆலோசனைகளை தெரிவிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்க உள்ள நிலையில், மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆகஸ்ட் மாதம் முதல் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கப்பட உள்ளதாக உழவர்கரை நகராட்சி தெரிவித்துள்ளது.

மோடி (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்சனுடன் தொலைபேசியில் உரையாடினார். இந்த

பேச்சுவார்த்தையின் போது, இருதரப்பு ஒத்துழைப்பை வரும் ஆண்டுகளில் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கான உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் வலியுறுத்தினர். இரு தரப்பிற்கும் இடையே, உயர் மட்ட தொடர்புகளால் உருவாக்கப்பட்ட உத்வேகத்தை எடுத்துக் கூறி, பல்வேறு துறைகளில் பரஸ்பர நன்மை பயக்கும் இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த அவர்கள் ஒப்புக் கொண்டனர். இதில், வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, கால்நடை வளர்ப்பு, மருத்துவம், கல்வி ஆகியவை அடங்கும். நியூசிலாந்தில் உள்ள புலம் பெயர்ந்த இந்தியர்களின் நலன்களை கவனித்துக் கொள்வதற்காக திரு லக்சனுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.

*மன் கீ பாத்* (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 112 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு, அனைத்து ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். இந்த மனதின் குரல்

நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் தங்கள் ஆலோசனைகளை தெரிவிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். மக்கள் ஆலோசனைகளையும், எண்ணங்களையும் My gov, Namo செயலி மூலமாகவோ அல்லது 1800-117800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தெரிவிக்குமாறு கூறியுள்ளார்.

மைக்ரோசாப்ட் (12)

உலகளாவிய மைக்ரோசாஃப்ட் விண்டோஸ் மென்பொருள் செயலிழப்பு தொடர்பாக பாதிக்கப்பட்ட விமான சேவைகள் அனைத்தும் படிப்படியாக சீரடைந்து வருகின்றன. இதனிடையே, நம் நாட்டில் விமான போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. அனைத்து விமான சேவைகளும் படிப்படியாக இயங்குவதாக கூறியுள்ள அமைச்சகம், விமான நிலைய செயல்பாட்டை அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்துள்ளது. சென்னை விமான நிலையத்தில் 24 மணி நேரத்திற்கு பின்னர் இணையதள சேவைகள் சீரடைந்ததை அடுத்து, பயணிகளுக்கான போடிங் பாஸ் கணினி மூலம் வழங்கும் பணிகள் மீண்டும் தொடங்கி உள்ளன. இன்று மாலைக்குள் அனைத்து விமான சேவைகளும்

முழுமையாக சீரடைந்து விடும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒலிம்பிக் (14)

வரும் 26 ஆம் தேதி முதல் தொடங்கும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று நாட்டிற்கு பெருமை சேர்க்க 117 இந்திய விளையாட்டு வீரர்கள் தயாராக உள்ளனர். இவர்களில் 24 பேர் ஆயுதப்படை வீரர்கள் ஆவர். இந்த 24 விளையாட்டு வீரர்களில் நட்சத்திர ஈட்டி எறிதல் வீரர் சுபேதர், நீரஜ் சோப்ரா உட்பட 22 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் உள்ளனர். ராணுவ சேவைகளில் உள்ள பெண்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். 2022- காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் வெண்கல பதக்கம் வென்ற ஹவில்தார் ஜெய்ஸ்மின் லம்போரியா, 2023 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற சிபிஓ ரித்திகா ஹூடா ஆகிய இரண்டு பெண் சேவை வீரர்கள் முதல் முறையாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கின்றனர். குத்து சண்டை வீரர் அமித்பங்கல், குண்டு எறிதல் வீரர் சிபிஓ தஜிந்தர்பால் சிங்தூர், அவினாஷ் முகுந்த் உள்ளிட்டோரும் நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வகையில்

இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

பட்ஜெட் (15)

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்க உள்ள நிலையில், மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. நாடாளுமன்ற இரு அவைகளும் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பை மத்திய அரசு இந்த கூட்டத்தில் கோரிக்கை விடுக்கிறது. வரும் திங்கட்கிழமை பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது. தொடர்ந்து வரும் செவ்வாய் கிழமை காலை 11 மணிக்கு நடப்பு நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். பிரதமராக திரு நரேந்திர மோடி 3 ஆவது முறையாக பொறுப்பேற்ற நிலையில் தாக்கல் செய்யப்படும் முதல் நிதிநிலை அறிக்கை இதுவாகும். மத்திய அரசின் தொலை நோக்கு பார்வையை முன்னெடுத்து செல்லும் வகையில் எதிர்கால கட்டமைப்பிற்கான பல்வேறு திட்டங்கள் இதில் இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. பட்ஜெட் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 12 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

கலாச்சார குழு (6)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் உலக பாரம்பரிய கலாச்சார குழுவின் 46 ஆவது சிறப்பு கூட்டம் நாளை புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த கலாச்சார கூட்டத்தை நாளை பிரதமர் தொடக்கி வைக்கிறார். வரும் 31 ஆம் தேதி வரை நடைபெறும் இக் கூட்டத்தில், பாரம்பரிய பெருமைகள், கலாச்சார முக்கியத்துவம் போன்றவற்றை பராமரிக்கும் நிலைபாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

கோவிட் (16)

கோவிட் -19 பெருந்தொற்று காலத்தில் 2020 ஆம் ஆண்டு இந்தியாவில் அதிகமான இறப்புகள் நடந்ததாக வெளியான செய்திக்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. அறிவியல் முன்னெற்றங்கள் என்ற கல்வி இதழில் இன்று வெளியிடப்பட்ட ஒரு ஆய்வறிக்கையின் கண்டுபிடிப்புகளை சில ஊடகங்கள் எடுத்துக் காட்டி உள்ளன. இவை ஏற்றுக் கொள்ள முடியாத மற்றும் தவறான மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டுள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5 ஐ பகுப்பாய்வு செய்வதற்கான நிலையான முறையாக பின்பற்றுவதாக  ஆசிரியர்கள் கூறினாலும், முறையியலில்

முக்கியமான குறைபாடுகள் உள்ளன என்றும், 2021 ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் குடும்ப சுகாதார கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்ட குடும்பங்களில் துணைக் குழுவை எடுத்து 2020 ஆம் ஆண்டின் இறப்பு விகிதத்தை, 2019 உடன் ஒப்பிட்டு, முடிவுகளை நாடு முழுமைக்கும் விரிவுபடுத்தி உள்ளது மிக முக்கியமான குறைபாடு என்றும் கூறப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் ஏற்பட்ட அனைத்து அதிகபடியான இறப்புகளுக்கும் கோவிட்-19 தொற்றுநோய் காரணம் அல்ல என்று அமைச்சகம் கூறியுள்ளது.

*அமித் ஷா* (11)

மத்திய உள்துறை அமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான திரு அமித் ஷா ஜார்கண்ட் மாநிலத்திற்கு 1 நாள் சுற்றுப் பயணமாக இன்று பிற்பகல் ராஞ்சி சென்றடைந்தார். அங்கு மாநில பாஜக வின் விரிவாக்கப்பட்ட செயற்குழு கூட்டத்தில் அவர் உரையாற்ற உள்ளார். கட்சியின் மாநில-மைய குழு கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டு தொண்டர்களிடையே உரையாற்றுகிறார். இது குறித்து ஜார்கண்ட் பாஜக தலைவர் திரு பாபு லால் மராண்டி கூறுகையில், சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் கட்சி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் செயல்பாடுகளை திரு அமித் ஷா மதிப்பாய்வு செய்வார் என்றார்.

மேலும், இவ்வாண்டு இறுதியில் மாநிலத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

*நீட் (8)*

இளநிலை மருத்துவ சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வு தொடர்பான தேர்வு மையங்கள் அடிப்படையிலான முடிவுகளை தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ளது. முன்னதாக, நேற்று முன்தினம் நடைபெற்ற நீட் முறைகேடுகள் தொடர்பான விசாரணையின் போது, தேர்வு மையங்கள் மற்றும் நகர் பகுதிகள் அடிப்படையிலான முடிவுகளை இன்று மதியத்திற்குள் தேசிய தேர்வு முகமை வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நீட் தொடர்பான அடுத்த கட்ட விசாரணை உச்ச நீதிமன்றத்தில் வரும் திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

*புதுச்சேரி-கால்நடை (11)*

புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆகஸ்ட் மாதம் முதல் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கப்பட உள்ளதாக உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு சுரேஷ்ராஜ் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டில்

வளர்க்கப்படும் நாய்களை வரைமுறைப் படுத்துவதற்காக வரும் ஆகஸ்ட் மாதம் முதல் மேட்டுப்பாளையம் கால்நடை மருத்துவமனையில் புதன் கிழமை தோறும் காலை 9.30 மணி முதல் 12 மணி வரை உரிமம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டில் நாய் வளர்ப்போர் தங்களின் ஆதார் மற்றும் வளர்ப்பு நாய்க்கு ஏற்கனவே தடுப்பூசி செலுத்தியதற்கான ஆவணங்களை சமர்பித்து உரிமத்தை பெறலாம். வளர்ப்பு நாய்களை முறையாக பராமரிக்காவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கு விழிப்புணர்வு (7)

புதுச்சேரி நலவழித்துறை, பூச்சிகளால் பரவும் நோய் தடுப்பு திட்டம் மற்றும் கோரிமேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி கோரிமேடு காமராஜ் நகரில் அமைந்துள்ள அங்கன்வாடியில் இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில், சுகாதார மேற்பார்வையாளர் திருமதி வாசுகி, கிராமப்புற செவிலியர்கள் திருமதி தனலட்சுமி, திருமதி வனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுகாதார நிலைய பொறுப்பு மருத்துவ அதிகாரி திருமதி சித்ரா டெங்கு நோய் குறித்த சிறப்புரையாற்றினார்.

*புதுச்சேரி-பட்டாசு* (9)

புதுச்சேரியில் தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு கடை வைக்க விரும்புவோர் அடுத்த மாதம் 14 ஆம் தேதிக்குள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கள் அறிவித்துள்ளார். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன், பட்டாசுக் கடையின் வரைபடம், பட்டாசு கையிருப்பின் அளவு, கடையை சுற்றி உள்ள சாலைகள் மற்றும் இதர கடைகள் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. வாடகை பத்திரம் அல்லது சொந்தக் கடையாக இருந்தால் அதற்கான ஆவணங்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை* (7)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று முதல் வரும் 26 ஆம் தேதி வரை இடி-மின்லுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளி காற்று

மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்சனுடன் தொலைபேசியில் உரையாடினார்.

பிரதமரின் 112 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் தங்கள் ஆலோசனைகளை தெரிவிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்க உள்ள நிலையில், மத்திய அரசு நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆகஸ்ட் மாதம் முதல் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கப்பட உள்ளதாக உழவர்கரை நகராட்சி தெரிவித்துள்ளது.